முருகப்பெருமான் துணை

**மகான் திருப்பாண் ஆழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.09.2023**, வெள்ளிக்கிழமை

1. தவசியே ஞானத் தலைவனின்
தனிப்பெருங் கருணை வடிவாக
அவதாரம் புரிந்த அரங்கனே
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது யாளி திங்கள்
குறைவிலா இருபானீர் திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 22 ம் நாள், 08.09.2023, வெள்ளிக்கிழமை)
அறிவுரை ஆசிதனை திருப்பாண் ஆழ்வாரும்
அருளுவேன் உலக நலம்பெற
3. நலம்தரும் அரங்கன் திருவடி
ஞானத்திருவடியாக இருக்க
சலனமின்றி உலக மக்கள்
சரணாகதி கொண்டு வருக
4. வருக வரமாக அவர்கட்கு
வடிவேலன் கருணை இறங்கி
பெருமைமிக்க ஞான வாழ்வாய்
பிரச்சினை பிரிவினை ஏதும் அனுகா
5. அனுகா அமைதி பாதுகாப்பு
ஆற்றல்மிக்க நிலைகள் கூடி
தான தரும சேவை பெருக்கி
தன்னார்வத் தொண்டர்களாகி
6. ஆகியே கலியினில் தேடும்
அரங்கனின் ஞானவான்களாக
அகிலத்தில் தேர்வு கண்டு
அற்புதம்பட உலகமாற்ற சேவை

7. சேவை முன்னின்று நடத்தும்
சிறப்பறிவு கொண்டவர்களாக
அவதார ஞானிகளாகவே
அனுகுவார் அனைவரும் தேறி
8. தேறியே பிறவிப் பயன்தனை
தேசிகனால் அடைவதுடன்
மாறிடுவர் அரங்கன் படைகளாக
மகான்கள் தொடர்பு கொண்டநல்
9. கொண்டநல் ஆற்றல் கூடி
குருமார்கள் விரும்புகின்ற
தொண்டும் தருமமும் தயவும்
தூய்மை நிறைந்த தலைமைதனை
10. தலைமைதனை கலியினில் படைத்து
தலைவன் முருகன் ஆசிபட
ஊழலிலா இனபேதம் இல்லா
உண்மைபட நன்மை புரிகின்ற
11. நன்மைபுரிகின்ற ஞான ஆட்சி
ஞானிகள் ஆட்சிதனை நிறுவி
நன்மை படைப்பர் அரங்கமகானின்
ஞானம் பெற்ற தொண்டர் பெருமக்கள்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—